எங்கள் பவானி

புலவர் செ. இராசு
தென்னிந்தியத் திருச்சபை சமுதாய உயர்பள்ளி,
ஈரோடு

வெளியீடு
வரலாற்றுச் சங்கம்
ஈரோடு

விலை: 50 காசுகள்

உ

காணிக்கை

திருப்பேரூர். அருள்திரு சாந்தலிங்க அடிகளார்
திருமடத் தலைமையேற்று அருளாட்சி
நடாத்தும்

தவத்திரு இராமசாமி அடிகளாரின்

பொன்னார் திருவடிக் கமலங்கட்கு

படைப்பவர்கள் :

வரலாற்றுச் சங்கத்தார்

ஈரோடு

(பிலவங்க - ஆனி - 27 ஆம் நாள்)

எங்களுரை !

பேரன்புடையீர்!

எங்கள் வரலாற்றுச் சங்கத்தின் பல்வேறு துறை ஆய்வில் ஒரு பகுதியைச் சிறு வெளியீடாக உங்கள்முன் அளிக்கின்றோம். பவானி நண்ணுவுடையார் (சங்கமேசுவரன்) திருக்கோயில் குடமுழுக்கு விழாவின்போது இதனை வெளியிடுவதில் எங்கள் குழு பெருமகிழ்வெய்துகின்றது.

எளிய இம்மலரைக் காணிக்கையாக ஏற்றருள்புரிந்த திருப்பேரூர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தலைவர் தவத்திரு. இராமசாமி அடிகளார் அவர்களின் அருள்கண்டு எங்கள் உள்ளங்கள் உவகையால் நிறைவுறுகின்றன.

சுவடியிலிருந்து கொங்கு மண்டல சதகப் பாடலைக் கொடுத்துதவிய எங்கள் 'ஐயா' வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கட்கும், நூல் அமைப்புக்கு வேண்டிய அறிவுரைகள் வழங்கிய புலவர் அ. மு. குழந்தை, நண்பர் புலவர் ந. செகதீசன் (தமிழன்பன்) அவர்கட்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இந்நூலை மிகக் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சிட்ட கோவை கைத்தறி அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி.

அன்பர்கள் நூலை வாங்கி, எங்கள் வரலாற்றுப் பணியை மேலும் ஊக்கமடையச் செய்வார்களாக.

இங்ஙனம்

வரலாற்றுச் சங்க ஆய்வுக் குழுவினர்

ஈரோடு

புலவர் வெ. க. பச்சையப்பன்
புலவர் இரா. சி. சென்னியப்பன்
புலவர் செ. இராசு

உ ள் ளே !

திருப்பணிப் பெருமை!

நல்லன்பர் இதயமெல்லாம் குளிரத்தக்க வகையில் நமது சங்கமேசுவரன் ஆலயத் திருப்பணி இனிதே நிறைவேறியுள்ளது. எண்ணியவற்றை எண்ணியபடியே முடிக்கும் உள்ளத் திண்மையும், விளம்பரமின்றி அடக்கத்துடன் ஆனால் கலையழகும் – தெளிவும் – இறையன்பும் கலந்த உளத்தினராய சான்றோர்கள் முன்னின்று இம்மாபெரும் பணியை முடித்திருக்கின்றனர். அவர்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இத்திருப்பணி ஒரு 'மாமாங்கம்' (சுமார் 12 ஆண்டுகள்) நடைபெற்றிருக்கின்றது. இது நீண்டகாலம் என்று கூறுவதற்கில்லை. அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கட்டிய தென்காசி விசுவநாதர் கோயில் கி. பி. 15ஆம் நூற்றாண்டிலேயே 17 ஆண்டுகள் திருப்பணி நடைபெற்றிருக்கின்றது. அரசன் திருப்பணியே 17 ஆண்டுகள்; இவ்வடியார் திருப்பணி 12 ஆண்டுகளில் முடிந்தது விரைவெனவே சொல்லத் தோன்றுகின்றது.

இத்திருப்பணியில் நாள்தோறும் பாண்டிய நாட்டுக் கல்வேலைக்காரர்கள் 140 பேர் சிற்ப சாத்திரத்தில் தேர்ச்சியும் புலமையும் கொண்ட ஒரு ஸ்தபதியின் கீழ் வேலை செய்து வந்தார்கள். சிற்பக் கலையில் கைதேர்ந்த சிற்பிகள் உயரிய வேலைப்பாடுகளுடன் கூடிய அமர சிற்பங்களைப் பெரிய கல் தூண்களில் சிற்றுளியால் செதுக்கியிருக்கிறார்கள். உயிரற்ற கற்பாறைகளிலும் நவரசங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மெழுகைக் குடைவதுபோல் பாறையைக் குடைந்து, சிந்திக்கவும் முடியாதவகையில் சிற்றுளிகளை ஏவி நல்ல உயிர்ச் சிற்பங்களை வடித்திருக்கிறார்கள். தங்கள் கைத்திறமையையும் மன ஆற்றலையும் காண்பித்துக் கல்லிலே கனவுகளை மெய்ப்பித்திருக்கிறார்கள். இச்சிற்பங்களை எதிர்காலத்தில் சிற்பக் கலைக்கு

மதிப்பும், கலையன்பர்களுக்கு மகிழ்ச்சியும் அளிக்கும் முறையில் செதுக்கியிருக்கிறார்கள்.

பவானிக் கோயிலை முன்பு புதியதாகக் கட்டியவர்களைக் காட்டிலும் இத்திருப்பணிக் குழுவினர் நான்கு மடங்கு புண்ணியத்தைப் பெறுகின்றனர். ஏனெனில் புதிதாக ஓரிடத்தில் கோயிலைக் கட்டுவதைக் காட்டிலும் பழைய கோயிலைத் திருப்பணி செய்வது நான்கு மடங்கு புண்ணியம் ஏற்படும் செயலாகும். இதனை

'முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவும்
தெரிந்து முனையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணிய நான்மடங் குறுவர்'

என்ற காஞ்சிப் புராணம் – சிவபுண்ணியப் படலப் பாடல் விளக்குகின்றது.

தென்காசி விசுவநாதர் கோயிலைக் கட்டிய அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தான் அமைத்த அவ்வாலயம் தெய்வச் செயலால் அமைந்தது என்றும், மீண்டும் கோயிலை விரிவு செய்பவர்களின் அடியில் வீழ்ந்து பணிவதாகவும் பாடிய பாடல் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்ததாகும். எந்தத் திருப்பணியைக் காணும் சமயத்திலும் அப்பாடலை நினைப்பது மிக நல்லதாகும்.

'சேலே றியவயல் தென்காசி ஆலயம் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செயல் அல்ல அதனைஇன்னம்
மேலே விரிவுசெய் தேபுரப் பார்அடி வீழ்ந்துஅவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம பாண்டியனே'

இப்பாடல் தென்காசி ஆலயச் சுவரில் கல்வெட்டாக இன்றும் உள்ளது.

'......அருள்தரும் சிவாலயங்கள்
கல்லினுல் அமைத்த பேர்கள்
கயிலைவிட்டு அகலார் தாமே!'

என்பது ஒரு பழம்பாடல் பகுதியாகும்.

கொங்கு வடகரையில் வானி!

'திருநணா' ஆலயப் பெருமைகளையும், பவானியைப் பற்றிய பிற வரலாற்றுச் செய்திகளையும் அறிந்துகொள்ளுமுன் இவ்வூர் அமைந்துள்ள நாட்டின் அமைப்பை ஒரு சிறிதாவது தெரிந்துகொள்ளுவது நலன் விளைவதாகும். கொங்கு நாட்டைப் பற்றியும், பவானி நகர் அமைந்துள்ள கொங்கு 24 நாடுகளில் ஒன்றாகிய வடகரை நாட்டைப் பற்றியும் கீழே காண்போம்.

கொங்கு நாடு

'கொங்கு' என்ற பழம்பெரும் (தலைநகர்) ஊரினால் இந்நாடு இப்பெயர் பெற்றது. இக்கொங்கு நாடு சங்க காலத்தே தனித்து விளங்கிய நாடு என்பது புறநானூறு, (160, 373) பதிற்றுப்பத்து (22) முதலிய எட்டுத்தொகை நூல்களாலும், சிலப்பதிகாரத்தாலும் ('கொங்கர் செங்களம்') அறியும் செய்தியாகும்.

சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன் கொங்கு, தொண்டை நாடுகளையும் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்று கூறும் வழக்கமும் முன்பு இருந்ததென்பதை

'நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியான் அல்லன் – துறையின்
விலங்காமை நின்ற வியன்தமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகும் கோ'

என்ற தண்டியலங்காரப் பாடலால் அறியலாம்.

எல்லைகள்

வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனி, மேற்கே வெள்ளியங்கிரி மலை, கிழக்கே குளித்தலை இந்த நான்கு எல்லைகளுக்குட்பட்டது கொங்கு நாடு. இதனை

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று – கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு'

என்ற பழம்பாடல் விளக்கும். கொங்கு மண்டல சதகமும் பாளையக்காரர் கைபீதுகளும் கிழக்கெல்லையாக மதிற்கரையைக் கூறும்.

நாட்டுப் பிரிவுகள்

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தொண்டை நாட்டுப் பகுதியிலிருந்து சோழ நாட்டு வழியாகக் காவிரி, அமராவதி, நொய்யல், பவானி போன்ற ஆற்றங்கரை வழியாகக் குடியேறிக் கொங்கு நாட்டின் பழங்குடி மக்களான கொங்கரை வென்றனர் வேளாண் குடியினர். கொங்கு நாட்டின் அதிகாரத்தைக் கைக்கொண்ட அவர்கள், தொண்டை நாடு 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது போலக் கொங்கையும் 24 நாடுகளாகப் பிரித்தனர். அந்நாடுகளில் ஒன்றே **'வடகரை நாடு'**.

வடகரை நாடு

வானியாற்றின் வடகரையில் அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்றது. இன்றைய பவானித் தாலூக்காவின் சமநிலப் பகுதி முழுவதும் வடகரை நாட்டினுள் அடங்கியிருந்தது. இந்நாட்டின் தலைநகர் அந்தியூர். கொங்கு நாட்டின் வடபகுதியில் இருக்கும் காரணத்தால் **'வடகொங்கு நாட்டு வடகரை நாடு'** என்று கூறப்பட்டது. இத்தொடரை அந்தியூர் செல்லீசுவரசாமி கோயில் கல்வெட்டால் அறிகின்றோம். வடகரை நாட்டில் 24 ஊர்கள் அமைந்திருந்தன. கொங்கு மண்டல சதகத்தில் ஊர்த்தொகைப் பாடல் அவ்வூர்களைத் தொகுத்துக் கூறுகின்றது.

'அந்தி யூரும்பட்டி லூரும் குறிச்சிபி
லாம்பட்டி சம்பைவானி

ஆப்புகூ டலிஞேடு கீழ்வானி மூங்கில்நகர்
ஆனமூ கப்பனூரும்
பைந்தரு விளங்குகரு வல்வாடி தன்ஞெடு
பகரமாப் பேட்டைபொன்னிப்
பழநதிக் கரைநெருஞ்சிப் பேட்டை வளவயல்
பரஎண்ண மங்கலமுடன்

செந்திரு விளங்கவளர் கோட்டைபூ தப்பாடி
சேருநகர் ஊர்உலகடம்
செழியகன் ஞப்பிலி பருவாச்சி பிரமயம்
சீர்கட் டியின்சமுத்திரம்
வந்தனே செயும்பெரியர் தங்குபூ ஞச்சியுடன்
வளர்சென்னம் பட்டியென்ன
மாகவிஞர் சாற்றுமிரு பத்துநான் கூர்களும்
வடகரைநன் ஞடுதானே!'

இப்பாடலில் ஆருவதாக வானி என்று குறிப்பிடப் பெறுவதே பவானி நகரம்.

நகர் பெற்ற நற்பெயர்

வானி

வடகரை நாட்டு ஊர்த்தொகைப் பாடல் பவானியை **'வானி'** என்றே குறிப்பிடும். வானி என்பது பவானியாற்றின் பழம்பெயர். சென்னிமலே, சிவன்மலே, திருச்செங்கோடு போன்ற மலேகளின் பெயர்கள் அதன்கீழ் அமைந்த ஊர்களுக்கும் பெயராக அமைந்தன போலவே வானியாற்றின் பெயர் ஊருக்கும் ஏற்பட்டது. ஆற்றின் பெயர் வானி — பவானி என மாறியபின் ஊருக்கும் அப்பெயரே ஏற்பட்டது. பவானி ஆற்றின் கரையில் கீழ்வானி, மேல்வானி என்ற ஊர்களிருப்பது இக்கருத்தை வலியுறுத்தும். வானி காவிரியில் கலப்பதால்

'வானி கூடல்', 'பவானி கூடல்' என்ற பெயர்களும் ஏற்பட்டன

பூவாணி

கொங்கு 24 நாடுகளில் ஒன்ருன பூவாணி நாட்டின் பெயரே பவானி, என்று மாறியது என்பதும் பவானியாற்றின் பழம்பெயர் பூவானியாறுதான் என்பதும் புலவர் அ. மு. குழந்தை அவர்கள் கருத்தாகும்.

நணா

திருஞானசம்பந்தர் தேவாரம் பாடிய காலத்தில் இவ் வூருக்கு நணா என்ற பெயர் வழங்கியது. திருநணா என்று இக்காலத்தும் இத்தலத்தைக் குறிப்பர். (**'திருநணாச் சிலேடை வெண்பா'** – புலவர் குழந்தை அவர்கள்)

நண்ணா

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழி பட்டோர்க்கு எவ்விதத் தீங்கும் நண்ணாது (அணுகாது) என்ற கருத்தில் இவ்வூர் நண்ணா – நணா என்ருயிற்ரும். இறைவனின் பெயர் **'நண்ணாவுடையார்'** என்றும் கூறப்பெறும். தலபுரா ணம் **'நண்ணாவில் வீற்றிருந்த சிவக்கொழுந்து'** என்று இறைவனைக் குறிப்பிடும். பல ஊர்களில் ஊருக்கு ஒரு பெயரும், சிவாலயத்திற்கு வேறு ஒரு பெயரும் கூறப்பட்டி ருப்பதுபோல ஊரின் பெயர் பவானியென்றும் சிவாலயம் 'திருநணா' என்றும் வழங்கப் பெற்றிருக்கலாம்.

சங்க இலக்கியம் சாற்றுவன!

பதிற்றுப் பத்தினுள் 7 ஆம் பத்தின் பதிகத்தில் குறிப் பிடப்பெறும் **'நன்ரு'** என்னும் குன்று பவானியின் அருகில்

வடக்கே உள்ள ஊராட்சிக் கோட்டை மலையாகத்தான் இருக்க வேண்டுமென்பது அறிஞர் சிலரது கருத்தாகும். திருஞான சம்பந்தர் தன் பதிகத்தில் இவ்வூரைத் 'திருநணு' என்றே குறிப்பிடுகின்ருர் என்பதைக் கண்டோம். சங்க காலத்தில் 'நன்ரு' என்று வழங்கிய பெயர் கி. பி. 7ஆம் நூற்ருண்டில் 'நணு' என்று மாறிவிட்டது.

சேர இளவரசன் ஆட்டனத்தியும், சோழர் குலக்கொடி ஆதிமந்தியும் நீர்விளையாட்டு விழாவிற்கு வந்து கலந்து கொண்ட 'கழார்' நீர்த்துறை பவானிக் கூடுதுறைதான் என்பது சிலர் கருத்து. பவானியாறும், காவிரியும் சங்க இலக்கியங்களால் புகழப் பெறுவதாகும்

கூடலூர் (கூடல் + ஊர்) என்று சங்க இலக்கியங்களில் குறிக்கப்படுவதும் இவ்வூராக இருக்கலாம்.

பவானியைச் சூழ்ந்து கொங்கு நாட்டிலுள்ள பெருந்துறை (வாகைப் பெருந்துறை) பூந்துறை (புன்றுறை) செங்குன்றூர் (திருச்செங்கோடு) பெருந்தலையூர், பொன்முடி, சித்தோடு, பேரோடு (சிற்றரையம் – பேரரையம்) முதலிய ஊர்கள் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெறும் பழைமையான ஊர்களாகும்

பாவலர் போற்றும் பவானியாறு!

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பழைமையான இலக்கியங்களால் புகழப்பெறும் பெருமையையுடையது காவிரியாறு சோழர்தம் குலக்கொடி காவிரி. கங்கையிற் புனிதமாய இக்காவிரியின் கரையில் விளங்குவது பவானி நகரம். காவிரிக் கரையில் பல ஊர்கள் இருப்பினும் ஊரெங்கும் படித்துறைகள் விளங்கி வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளமுடைய காவிரியை முழுவதும் பயன்படுத்துவது இவ்வூரின் தனிச்சிறப்பு. இத்தலத்தில்

காவிரியோடு வந்து சேரும் பவானி ஆற்றின் பெருமையை இலக்கியங்களின் வாயிலாகக் காண்போம்.

பதிற்றுப்பத்து

கேரளத்திலுள்ள அட்டபாடிப் பள்ளத்தாக்கில் தோன்றிக் குன்னூராறு, பாய்கரையாறு, மாயாறு, கல்லாறு போன்ற துணையாறுகளின் நீரைப்பெற்று ஓடிவந்து இங்குக் காவிரியில் கலப்பது பவானியாறு. பெருங்குன்றூர்க்கிழார் என்னும் சங்கப் புலவர் இளஞ்சேரல் இரும்பொறையின் திருமேனி மென்மைக்கும், தூய்மைக்கும், தண்மைக்கும் இவ்வானியாற்றின் நீரை உவமையாகக் கூறினர். பதிற்றுப்பத்து 86 ஆம் பாடலில் இப்பகுதியுள்ளது.

'புனல்பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்
சாந்துவரு வானி நீரினும்
தீந்தண் சாயலன் மன்ற தானே'

என்பது அப்பகுதி.

கொங்கு மண்டல சதகம்

கொங்கு நாட்டிலுள்ள ஆறுகளையெல்லாம் தொகுத்துப் பின்வருமாறு கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞர் கூறுகின்றார்.

"திருமணி தொப்பைபூங் காவேரி வானியும்
செய்யநதி
தருமணி காஞ்சி பொருநைநள் ளாறொடு
சண்முகமும்
குருமணி பாலை நதிவாழை காரி
குடவந்தியும்
வருமணி சண்பகம் சிற்றாறு சூழ்கொங்கு
மண்டலமே!"

இப்பாடலில் காவிரியுடன் இணைத்துக் கூறப்படும் பெருமை

யுடன் விளங்குகிறது' பவானியாறு. '*காவிரியோடு கலக்குறு வானி*' என்பது சதகத்தின் மற்ருெரு பாடல் பகுதியாகும்.

சாமிநாதக் கவிஞர் நூல்கள்

வெள்ளோடு அருகேயுள்ள புதுநகர் நல்லணவேள் மீது சாமிநாதக் கவிஞர் பாடிய காதல் பிரபந்தத்தில் தேவர்களும், தவம்செய் முனிவர்களும் பவானியாற்றில் மூழ்கி நீராடுவ தாகக் கூறுகின்ருர்.

'தேவர் திரள் மாதவர்கள் சேர்ந்துதினம்
தோய்ந்திலங்கும்
காவிரி **பவானி** காஞ்சியனு மாநதியான் (23)

என்பது அக்காதல் பிரபந்தத்தில் காணப்படும் வரிகளாகும்.

இப்புலவர் பாடியுள்ள '*சென்னிமலையாண்டவன் பிள்ளைத் தமிழில்*' வானியாற்றைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ''*தெய்வவானி*'' என்று கூறுகின்ருர். பூந்துறை நாட்டில் ஓடும் நதிகளைத் தொகுத்துக் கூறும்பொழுது

''சரசகாவிரி **வானி** காஞ்சியனுமையும்
சதுர்வித நதி''

என்று பாடுகின்ருர்.

பொருநையும் வானியும்

மேற்குத் தொடர்ச்சி மலையில் பாலக்காட்டுக்குத் தெற்கே தோன்றும் ஆறுகள் '*பொருநை*' என்ற பொதுப்பெயரைப் பெற்று விளங்குவதும், பாலக்காட்டுக்கு வடக்கே தோன்றும் ஆறுகள் '*வானி*' என்ற பொதுப்பெயரைப் பெற்று விளங்கு வதும் வரலாறு காட்டும் உண்மையாகும்.

கோவையின் அருகே **சிறுவாணி** ஓடுகிறது. பவானி மட்டுமின்றிக் கன்னட நாட்டில் **கீழ்வானி** என்ற ஆறு ஒன்றும் ஓடுகிறது. அவ்வாற்றை இன்று '*கெப்பாணி*' என்று அழைக்கின்றனர். பெரியாற்றின் கிளையாறு ஒன்று

திருப்பொருநைத்துறை (திருப்புணித்துரு) என்று வழங்குவதும், தாராபுரம் அருகே ஓடும் ஆன் பொருநையும், (ஆம்பிராநதி – அமராவதி) பாண்டிய நாட்டில் தண்ணான் பொருநை (தாமிரபரணி) ஓடுவதும் இதனை மெய்ப்பிக்கின்றது.

சில குறிப்புக்கள்

'எற்று திரைப் பொன்னி கூடுறு வானி' என்று தனிப்பாடலும், 'வடகொங்கில் வானியாற்றில்' என்று வேதாந்த தேசிகராலும் புகழப்பட்ட இப்பவானியாறு அவிநாசி, கோபி, ஈரோடு, பவானி தாலூக்காக்களில் சுமார் 2376 சதுரமைல் நிலத்தை வளமுடையதாக்குகின்றது 1955 ல் கட்டி முடிக்கப் பெற்ற பவானிசாகர் அணையினால் சுமார் 21,100 ஏகர் பாசன வசதி பெறுகிறது.

சத்தியமங்கலத்தின் மேற்கே 4 ஆவது கல்லில் பவானி யாற்றைத் தடுத்து அணை கட்டினால் தாராபுரம், பல்லடம், அவிநாசி தாலூக்காக்களில் 50,000 ஏகர்கள் பாசனவசதி பெறும் என்று 1828 ல் மான்ட்கோமரி கூறினார்.

1834 ல் பவானியாற்றில் நீலகிரி மாவட்டத்தில் அணை கட்டவேண்டுமென்று சர் ஆர்தர் காட்டன் யோசனை கூறினார். மீடு பென்னிகுக் அட்ரி குழுவினர் பவானியாற்றில் பல தடுப்புக்கள் (கலிங்குகள்) ஏற்படுத்திப் பாசனத்தைப் பெருக்க வேண்டும் என்று 1878 ஆம் ஆண்டு பரிந்துரை செய்தனர்.

திருநணாவும் திருஞானசம்பந்தரும்

கொங்கேழு சிவாலயங்கள் :

கொங்கு நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஏழு. இவ்வேழு தலங்களையும் தொகுத்துப் பின்வருமாறு ஒரு பழம்பாடல் கூறும்.

'ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறைசை
நீதி அவிநாசி நீள்நணு — மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதமை
நெஞ்சமே நித்தம் நினை'

கோவை கிழார் திரு சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் ஓர் அழகிய பாடலில் இத்தலங்களின் பெருமையைக் கூறுகின்றார்

'திருமுருகன் பூண்டியொடு
திருநல்அவி நாசி
திருநணுவும் கொடுமுடியும்
திருச்செங்கோ டிவைகள்
கருவுருவா நிலெவெஞ்சன்
கூடலிவை ஏழும்
கவின்பேரூர் முதல்வைப்புத்
தளிநகர்கள் எமதே!'

என்பது அப்பாடலாகும்.

திருஞானசம்பந்தர் பதிகம்

திருச்செங்கோட்டிற்கு வந்து வழிபட்டு மேற்கிலிருந்த சில பகுதிகளின் வழியாகப் பவானிக்கு வந்து வழிபட்டுப் பதிகம் பாடியபின் மீண்டும் திருச்செங்கோடு சென்று தங்கினார் சேக்கிழார்.

'அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர்கோயில்
எப்பாலும் சென்றேத்தித் திருநணு வினையிறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து வைகினார்'

என்பது தெய்வமணம் கமழும் சேக்கிழார் திருவாக்கு.

'பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண்
டேறதேறி

அந்தா ரரவணிந்த வம்மா னிடம்போலும்
அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில்
வண்டுபாடச்
செந்தேன் றெளியொளிரத் தேமாக் கனியுதிர்க்கும்
திருநணுவே!'

இப்பாடல் திருஞானசம்பந்தர் பதிகத்தில் ஒரு பாடலாகும்.

கொங்குநாடும் ஞானசம்பந்தரும்

திருஞானசம்பந்தர் மீது கொங்கு நாட்டு மக்களுக்கு மிகுந்த அன்பு உண்டு. பிற்கால அடியவர் சிலர் சம்பந்தரின் பெயரைத் தங்கள் பெயரோடு இணைத்து வைத்துக் கொண்டனர். "*மன்றுள்ஆடி சம்பந்தப் பெருமாள்*" "*செல்வன் ஞானசம்பந்தன்*" "*காழியாண்டான்*" போன்ற பெயர்களை இவ்வட்டாரக் கல்வெட்டுக்களில் காணுகின்றோம்.

கொங்கு நாட்டுப்புலவர்கள் தாங்கள் இயற்றும் நூல்களில் திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் தனி வணக்கம் கூறினர்.

"வந்த புயசயில மன்மதனும் நல்லணன்மேல்
சந்ததம்சேர் காதல் தமிழ்பெருகப் பாடுதற்குக்
கூடற் செழியன் குளிர்சுரம் தீர்பதிகம்
பாடியசம் பந்தர் பதமுடிமேல் சூட்டிடுவோம்"

என்பது சாமிநாதக் கவிஞரின் பாடற் பகுதியாகும்.

அருணகிரியாரின் அருமைத் திருப்புகழ்

கி. பி. 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து சந்தக் கவிகள் மூலம் முருகன் புகழ் பாடிய அருணகிரிநாதர் கொங்கு நாட்டுக்கு வருகைதந்து 40 தலங்களுக்குச் சென்று சுமார் 250

திருப்புகழ்ப் பாக்கள் பாடியுள்ளார். சென்னிமலை வேலவனிடம் திருப்புகழ் பாடிப் படிக்காசு பெற்றுக் கொங்கு நாட்டில் ஏற்பட்டிருந்த பஞ்சத்தைப் போக்கினுர். கொங்கு நாட்டில் இரண்டு முறை தலயாத்திரை செய்துள்ள அவர், முதல் யாத்திரையின் பொழுது பவானிக்கும் வந்து ஒரு திருப்புகழ் பாடியுள்ளார்.

'கலைமேவு ஞானப் பிரகாசக்
　　கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே
　　பதிஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
　　மனமேவு வாலக் குமரேசா
சிலைவேட சேவற் கொடியோனே
　　திருவானி கூடற் பெருமாளே!'

இதனைத் 'திருவாணி கூடற் பெருமாளே' என்று மாற்றிப் பதிப்பித்துத் திருமகளும், கலைமகளும் (திரு, வாணி) கூடியுள்ள மதுரை (கூடல்) என்ற கருத்தில் மதுரைப் பாடலோடு சேர்த்துள்ளனர். மதுரைக்குக் கூடல் என்ற பெயர் திருவும் வாணியும் கூடியதால் ஏற்பட்டதன்று. திருவிளையாடற் புராணம் அதற்கு வேறு காரணம் கூறும்.

திருப்புகழ் ஓலைச்சுவடிகளில் 'திருவானிகூடல்' என்ற பாடமே உள்ளது. கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் பவானியை 'திருவானிகூடல்' என்றே குறிக்கின்றன. இது போன்றே சில திருப்புகழ்ப் பதிப்பில் சென்னிமலைத் திருப்புகழ் திருச்சிராப்பள்ளியோடும், சிவன்மலைத் திருப்புகழ் பழனியோடும் சேர்த்துப் பதிப்பித்திருக்கின்றனர்.

பவானி கூடற் புராணம்

பவுசுயோத்தர புராணம், பிரமகைவர்த்த புராணம் போன்ற வடமொழிப் புராணங்களில் இத்தலத்தைப் பற்றிய

குறிப்புக்கள் உண்டு. இதனையொட்டி ஒராட்டுக்குப்பை செட்டி பாளையம் வாசுதேவ முதலியார் தமிழில் தலபுராணம் ஒன்று இயற்றியுள்ளார். அந்நூல் '**பவானி கூடற் புராணம்**' என்று பெயர் பெற்று விளங்குகிறது. 18 சருக்கங்களையும் 901 பாடல் களையும் கொண்டது இப்புராணம். இந்நூலாசிரியர் சுமார் 150 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர். இந்நூல் 85 ஆண்டுகட்கு முன்பே அச்சிடப் பெற்றுள்ளது.

இவ்வூர் **பஞ்சகிரி மத்தியப் பிரதேசம்** என்று குறிப் பிடப் பெற்றுள்ளது. நாககிரி, (திருச்செங்கோடு) சங்ககிரி, வேதகிரி, (ஊராட்சிக்கோட்டை) மங்கலகிரி, (பெருமாள்மலை) பத்மகிரி என்ற ஐந்து மலைகளால் சூழப்பட்ட பகுதி பவானி என்பது இதன் கருத்தாகும். பெருநிதித் தலைவன் குபேரன் இங்குவந்து பூசித்தான். இதன் காரணமாக இத்தலத்திற்குத் '**தட்சிண அளகை**' (தெற்கு அளகாபுரி) என்ற பெயர் ஏற் பட்டது என்பர். இத்தலத்தை வணங்கிப் பேறுபெற்றவர்களில் விசுவாமித்திரர் ஒருவர். கூடுதுறையில் காயத்ரி மண்டபமும், காயத்ரி லிங்கமும் – படித் துறையும் உண்டு.

புராண நூல்களில் உள்ள இரண்டு பாடல்களைக் காணலாம்.

சங்கமேசுரர் துதி :

'பண்ணரும் மறையோனும் பாலாழி துயின்றோனும்
படிவம் வேறா
விண்ணாடி மண்ணிடந்தும் காண்பரிய பேரொளியாய்
மெய்யன் புள்ளோர்
உண்ணாடும் பூரணமாய்ப் புவனசரா சரவுயிருக்
குயிராய் ஞானக்
கண்ணாகி நண்ணாவில் வீற்றிருந்த சிவக்கொழுந்தைக்
கருத்துள் வைப்பாம்!'

வேதநாயகி துதி :

'பண்பெற்ற மறைக்கிழவன் கைஆறக் கடுங்கால
படர்கால் ஆற

எண்பத்து நான்குநூ ருயிரந்தா யருஞ்சுமக்கா
திளைப்பிங் காறத்
தண்பெற்ற பெருங்கருணை யதுகொழிக்கும் கடைக்கணருள்
தந்தாட் கொண்டேன்
புண்பெற்ற பவந்துடைத்த வேதநா யகிமலர்த்தாள்
போற்றல் செய்வாம்!'

தனிப்பெருமை கொண்ட தலவிருட்சம்

இங்குத் தலவிருட்சம் இலந்தை மரம். இலந்தைக்கு வட மொழியில் 'பதரி' என்று பெயர். எனவே, தலவிருட்சத்தின் பெயரையொட்டி இத்தலத்திற்கும் '**பதரிகாச்சிரமம்**' என்று பெயர் ஏற்பட்டது. வேதமே இங்கு இலந்தை மரமாக வந்த தாகப் புராணம் கூறும். இம்மரம் நாள்தோறும் இறைவனின் பூசைக்கு மிகச்சுவையுடைய ஒவ்வொரு பழத்தைத் தருமாம். இதனைக் கொங்கு மண்டல சதக ஆசிரியர் ஒரு பாடல் மூலம் விளக்குகின்றார்.

'அருந்தவ மாமுனி வோர்களும் தேவரும்
அன்புடனே
நிரந்தர மாகத் தொழும்ஆல யத்துக்கு
நித்தநித்தம்
திருந்தும் பரம சிவன்பூச னைக்கொரு
தென்னிலந்தை
மரங்கனி யீவதும் நண்ணூர் சூழ்கொங்கு
மண்டலமே!'

என்பது அவர் பாடல்.

நீடு புகழ் உற்ற கூடுதுறை

காவிரியும் பவானியும் கூடுகின்ற கூடுதுறை மிகப் புகழ் பெற்றது. வடநாட்டில் உள்ள திரிவேணி சங்கமத்திற்கு

(பிரயாகை – அலகாபாத்) ஒப்பாகக் கூறுவர். பிரயாகையில் கங்கையும், யமுனையும், கண்களுக்குத் தெரியாமல் (அந்தர் வாகினியாக) சரசுவதியாறும் கூடுகின்றன என்பர். அது போல இங்குக் காவிரியாறும், பவானியாறும், கண்களுக்குத் தெரியாமல் அமுத நதியும் கூடுகின்றனவாம்.

அமுதநதியின் வரலாறு

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்றனர். திருமாலிடமிருந்து பராசர முனிவர் சிறிது அமிர்தம் பெற்றார். அசுரர்கள் பராசர முனிவரிடமிருந்து அமிர்தத்தைப் பிடுங்கத் துரத்தினர். சிவபெருமான் காப்பாற்றினார். பராசரர் அமிர்தத்தைக் கூடுதுறையில் கொண்டுவந்து புதைத்துவிட்டார். அவ்வமிர்தம் பெருக்கெடுத்து ஓடிக் கூடுதுறையில் கலந்தது. அமுதநதியெனப் பெயர் பெற்றது. பின்னர் அந்த அமிர்தம் இலிங்கமாக மாறிற்றாம். கூடுதுறையில் அமுதலிங்கம் என்ற சிவலிங்கமூர்த்தி இருக்கின்றது. இதனைத் தலபுராண ஆசிரியர் ஒரு பாடல்மூலம் விளக்குகின்றார்.

"பொன்னியே கங்கை யமுனையே பவானி
பொருவரும் பராசரன் வகுத்த
மின்னவிர் அமுத நதியதே வானி
யல்லது வேறல இந்தத்
தன்னிகர் பிறிதில் தலந்திரி வேணி
சங்கமம் ஆதலால் 'தென்பால்
கன்னிமா மதில்சூழ் காசியின் மேலாய்க்
கவினுமிக் கடிநகர் அன்றே!"

காவிரி பவானி கலந்துறை

நல்லணவேள் காதல் பிரபந்தத்தின் தலைவன் பவானிக் கூடுதுறைக்கு வந்து நீராடிச் சங்கமேசுவரனையும் வேதநாயகியையும் வணங்கி வேட்டைக்குச் சென்றதாக அந்நூலாசிரியர் கூறுகின்றார்.

'கன்ஞ வுதாரன்னனக் காட்சிகொண்டு மேன்மைபெற்றுத்
தன்ஞஸ்மை யாகத் தானிருக்கும் நாளொருநாள்
பூவுலகின் மிக்கான புண்ணியநதி யென்றினிதாய்க்
காவிரி பவானி கலந்துறை நீராடி
வெண்டிருநீ ரும்புனைந்து மேலாம் மறையவர்க்குப்
பண்டுலவு தானதர்மம் பண்பாகச் செய்தயன்மால்
தேடஅரிய சிவசங்க மேசுரரைத்
தாள்தொழுது போற்றியன்பாய்த் தான்றழைக்கவும்பரிவாய்
வேத உமையை விரும்பித் துதித்துநன்ருய்
சீதரனைக் கண்டுபதம் செப்பமுட னேபணிந்து'

என்பது அவர் பாடல் பகுதியாகும்.

நீராடும் காலம்

கூடுதுறையில் என்றும் மூழ்கிப் பெரும்பேறு பெறலாம். அமாவாசை நாட்களிலும், ஆடிப் பதினெட்டன்றும் இங்குப் பெரும் கூட்டம் கூடுகிறது. ஆனல் மூழ்குவதற்கு மிக ஏற்ற காலம் சூரிய கிரகண – சந்திர கிரகண நாட்கள்தாம் என்று கொங்கு மண்டல சதக ஆசிரியர் கூறுகின்ருர். அன்றைக்குக் கூடுதுறையில் மூழ்குபவர்கள் வீடுபேறு அடைவராம்.

'காலில் அரவம் இருசுட ரைப்பற்றும்
காலத்திலே
மேலுல கம்புக விரும்புவோர் சென்று
மூழ்குவதும்
கோல மிகுந்த பவானியும் பொன்னியும்
கூடுதுறை
வாலிப காசி நண்ணுவூர் சூழ்கொங்கு
மண்டலமே!'

என்பது இதனை விளக்கும் கொங்கு மண்டல சதகப் பாடலாகும். தலபுராண ஆசிரியர் ''**காசியின் மேலாய கடிநகர்**'' என்ருர். சதகத்தின் ஆசிரியர் '**வாலிப காசி**' என்று கூறுவது கருதத்

தக்கது. தலபுராண ஆசிரியர் வேறொரு பாடலில் "இளைய காசி" என்பார்.

'இளைய காசியும் வதரியா ரணியமும்
ஏற்ற மார்தென் னுட்டில்
விளையும் நலத்திரி வேணிசங் கமுமாய்
விளங்கு றுதிரு நண்ணு
உளையும் அன்பருக் கருள்சங்க மேச்சுரன்
உமைம றைநா யகிபங்
களையும் சிற்பரன் நிலவிய பெருந்தலம்
அடைந் தவர்பெரி யோரே!'

என்பது அத்தலபுராணப் பாடலாகும்.

புகழ்பாடும் இலக்கியங்கள்

சங்கப்பாடலும், தேவாரமும், திருப்புகழும், கொங்கு மண்டல சதகமும், பவானி கூடற்புராணமும் பவானியைப் புகழ்கின்ற பாக்களில் சிலவற்றை முன்பு கண்டோம். இன்னும் பதிற்றுப்பத்தந்தாதி, மாலை, உலா, கலம்பகம் முதலிய பிரபந்தங்கள் இத்தலத்திற்குண்டு.

இத்தல அம்மன் பேரில் "வேநாயகி பிள்ளைத் தமிழ்" ஒன்றுண்டு அப்பிள்ளைத் தமிழிலுள்ள வருகைப் பருவப் பாடல்களில் இரண்டைப் பார்க்கலாம்.

(அ) எள்ளத் தனையும் கள்ளமிலார்
இதயத் தடத்தின் இனிதலரும்
இனிய மலரே அண்டருணற்
கெட்டாத் தேனே கண்டவர்கள்
அள்ளிக் கொள்ளும்பே ரழகுவளர்
அகமே கணுவு ருக்கரும்பே

அரிய தவமே தவப்பயனே
அன்பே கங்கை நதிபுனையும்
வள்ளல் தருவில் விளையாடும்
மயிலே வேத நாயகியே
வரம்வேட் டவருக் கருள்புரிய
வானி வாழும் பெருவாழ்வே!
தள்ளத் தகும்எங் தமக்குமருள்
தாயே வருக வருகவே
தாயேழ் புவியும் காக்கவரும்
தாயே வருக வருகவே!

(ஆ) கரியே யனைய தன முறுசங்
கரியே வருக களத்தினிடை
கரியேய் பரமன் மகிழெழிற்சா
கரியே வருக ஆகமெல்லாம்
கரியே நிகர்மால் முதலுயிர்க்குக்
கரியே வருக ஐங்தெனுமக்
கரியே வருக மிகுகருணா
கரியே வருக பிறப்புறுபூ
தரியே திருநண் ணுவுறுப
தரியே விரும்பும் மாயவன்சோ
தரியே வருக எங்குநிரங்
தரியே வருக குழலெனுங்கங்
தரியே வேத நாயகிசுங்
தரியே வருக வருகவே
தாயேழ் புவியும் காக்கவரும்
தாயே வருக வருகவே!

இவ்வூரில் வாழ்ந்த பாலபாரதி முத்துசாமி ஐயர் என்பவர் **'சதகம்'** ஒன்றும், பல தனிப் பாடல்களும், **கீர்த்தனைகள்** பலவும் பாடியுள்ளார். ஒரு கீர்த்தனையில்

"போதார் மணவதரி நீழலின்
பூங்காவனம் சிவசங்க மேச்வர

புனிதப்ரபு விடமேவிய மலேபெற்றிடு மகளேமது
பொழிவுற்றிடு பொழியேஎழில்
செழுமைக்குழல் வேதாம்பிகை"

என்று வேதநாயகியைப் போற்றுகின்றார்.

என் ஆசிரியப் பெருந்தகையாரும் கொங்குநாட்டு முது பெரும் புலவருமான எழுமாத்தூர் வேலம்பாளேயம் வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களிடம் '**வேத நாயகியம்மன் சதகமும்**', மிக அருமையான '**வேதநாயகி யம்மன் பதிகமும்**' உள்ளன. அவர்களே இத்தலத்தின் பெருமையெல்லாம் விளங்கச் சுமார் 300 வரிகளில் '**வதரி யாற்றுப்படை**' என்ற நூலே அழகிய முறையில் இயற்றியுள் ளனர். இந்நூல்கள் வெளிவரின் இத்தல மகிமை மேலும் விளக்கமுறும்.

இறைவன் திருநாமம்

இத்தலத்துச் சிவபெருமானுக்குச் 'சங்கமேசுவரன்' என் றும் அம்மனுக்கு '**வேதநாயகி**' என்றும் பெயர். கல்வெட்டுக் களில் இறைவன் பெயர் '**நண்ணுவுடையார்**' என்றும் இறைவி '**பண்ணுர்மொழியம்மன்**' என்றும் குறிப்பிடப்பெறுகின்றனர். இரண்டு ஆறுகட்கு இடையில் இறைவன் ஆலயம் இருப்பதால் '**நட்டாற்றீசுவரன்**' என்றும் கூறுவர். ஒரு பழம்பாடல் '**வானிலிங்கேசுவரன்**' என்று இறைவனேக் குறிப்பிடும். இத் தலத்தைத் '**திருமுக்கூடல்**' என்றும் இக்கோயில் நிருவாகி களேத் '**திருமுக்கூடல்' தானத்தார்** என்றும் கூறுவர்.

பூந்துறையைத் தலேநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சில வேளாளர் குடித் தலேவர்கள் தங்களுக்கு '**நண்ணுவுடையார்**' என்று பெயர் சூட்டிக் கொண்டனர். '**மன்ருடியார்**' போல அது மரபுப் பெயராக விளங்கியது.

'வேணு வுடையான் வெள்ளோ டுலகுடையான்
ஆனூர்க்குச் சர்க்கரைமன் ருடி—வேணுபுகழ்
நாவேந்து பூந்துறைசை நண்ணு வுடையார்க்கு
மூவேந்தர் சூட்டும் முடி'

'தென்னூர் மதுரை சிரீராமப் பையன்
செழுங்கிரியில்
பொன்மாரி பெய்திடும் பூந்துறை நாடதும்
பூவணையும்
ஒன்மான மாகிய நண்ணு வுடையார்
உலகுடையார்
மின்னூர் கனக முடிசூட்டு வார்கொங்கு
மண்டலமே!'

இம்மரபினர் சங்கமேசுவரனை (நண்ணுவுடையார்) வழிபடு கடவுளாகக் கொண்டமையால் இப்பெயர் பெற்றனர் போலும்.

தென்னக அரசரின் திருநணுப் பணிகள்!

பல்லவர் காலச் சிலை

பல்லவர்கள் கொங்கு நாட்டை வென்று ஆட்சி புரிந்தமைக்குச் சரியான சான்றுகள் இல்லையென்றாலும் பல்லவர் காலத்துக் கட்டிட–சிற்பக் கலையின் சான்றுகளைக் கொங்கு நாடு முழுவதும் காணலாம். ஈரோடு மகிமாலீசுவரர் கோயிலும், அங்குள்ள துவாரபாலகர் சிலைகளும், நசியனூர் மூவேந்த சோழீசுவரத்தில் காணப்படும் கல் சிலையும் அதற்குத் தக்க சான்றுகளாகும். சில கல்வெட்டுக்களில் *''கச்சிராயன்'' ''காடவதரையன்'' ''காடுவெட்டி''* போன்ற பெயர்களாலும் பல்லவர் தொடர்பை அறியலாம்.

பல்லவர் காலத்திய துவாரபாலகர் சிலை ஒன்று பவானி வேதநாயகி ஆலய முன் மண்டபத்தில் எடுத்து வைக்கப் பட்டுள்ளது. இரண்டு திருக்கைகளும் நேரான பார்வையும் உடைய பழங்காலச் சிலையாகும் அது.

பாண்டியர் தொடர்பு

நெடுஞ்சடையன் பராந்தகனின் தந்தை தேர்மாறன் காவிரியைக் கடந்து மழகொங்கு (கீழ்கொங்கு) நாட்டைத் தீன் வசப்படுத்திக் கொடுமுடி சென்று (கரூர்) பசுபதியை வணங்கிக் கங்க அரசனுெடு சம்பந்தம் செய்துகொண்டு கூடல், வஞ்சி, கோழி நகரங்களின் மதில்களையும் புதுப்பித்தான் என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது. இச்செப்பேட்டில் கூடல் வஞ்சி, கோழி முறையே பவானி, கரூர், உறையூர் என்ற ஊர்களைத்தான் குறிக்கின்றன என்பது ஆய்வாளர்கள் முடிவு.

"பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்டு
அழகமைந்த வார்சிலையின் மழகொங்கம் அடிப்படுத்து
மீண்டொளிய மணிஇமைக்கும் எழில் அமைந்த
நெடும்புரிசைப் பாண்டிக்கொடுமுடி சென்றெய்திப்
பசுபதியது பத்மபாதம் பணிந் தேத்திக்
கனகராசியும் கதிர்மணியும் மனமகிழக் குடுத்திட்டுங்
கொங்கர் வந்நறுங் கண்ணிக்
கங்க ராஜனுெடு சம்பந்தஞ் செய்தும்
....
கூடல் வஞ்சி கோழி என்னும்
மாடமதில் புதுக்கியும்"

என்ற பகுதிகள் வேள்விக்குடிச் செப்பேட்டின் பகுதியாகும்.

சோழன் திருப்பணி

இத்தலத்தின் சிறப்பைக்கேள்வியுற்று ஒரு சோழ மன்னன் தன் மனைவியோடு இங்கு வந்து பிள்ளை வரம் கேட்டானும். தலவிருட்சமாகிய இலந்தையின் கனியினுல் அவன் பட்டத்தரசி குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். இதனுல் மனமகிழ்ந்த சோழன் சில திருப்பணிகளை மனமுவந்து செய்தான். கொங்குச் சோழ மன்னன் கரிகாலன் இங்குச் சில திருப்பணிகளைச் செய்த தாகச் சோழன் பூர்வ பட்டையம் கூறுகின்றது.

மைசூர் அரசின் தளவாய்!

கி. பி. 16ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் மைசூர் அரசர்களுக்கும் கொங்கு நாட்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. சிவகிரி, துடுப்பதி, ஈரோடு, கொளிஞ்சிவாடி, அவிஞசி, குட்டகம், சேவூர், தாராபுரம் முதலிய இடங்களில் மைசூர் அரசமரபினரின் கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன.

தாராபுரம் அனுமந்தராயர் கோயில் திருவிழா நடத்த மானியம் விட்டவர் ஒரு மைசூர் அரசர். திருச்செங்கோடு அர்த்தநாரிக்கு வாங்கலில் 6 மாநிலம் மானியமாக விட்டவர் களும், ஏழூரிலிருந்து தேர் கொண்டு வந்து திருச்செங்கோடு விழாவில் தேரோட்டம் நடத்தியவர்களும் மைசூர் அரசர்களே. சங்ககிரிக்கு (குன்றத்தூர் துர்க்கம்) அருகேயுள்ள தாழையூர் (கிருஷ்ணராஜபுரம்) மாங்குடிப்பட்டி என்ற இரண்டு கிராமங் களை 32 வைணவ பிராமணர்கட்கு சர்வ மானியமாக விட்டவர் அப்பிரதம கிருஷ்ணராஜ உடையார். (கி. பி. 1717)

இவருடைய தளபதி தேவராயர் பவானிக் கூடலில் மகாமண்டபத்தின்மேல் கல்தளமிட்டதாகப் பிரகாரச் சுவர்க் கல்வெட்டுக் கூறுகின்றது.

கெட்டி முதலியார் காலத் திருப்பணிகள்!

கொங்கு 24 நாடுகளில் ஒன்று பூவாணி நாடு. அந்நாட்டில் தாரமங்கலத்தைச் சேர்ந்த கெட்டி முதலியார் கி. பி. 15 – 17ஆம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டுப் பகுதியில் அதிகாரம் செலுத்தினர். மூவேந்தர் சின்னங்களான புலி, வில், கயல் ஆகியவற்றுடன் சிங்கத்தையும் தங்கள் கொடியில் சின்ன மாகப் பொறித்துக் கொண்ட பெருமை அவர்கட்குண்டு. பூவாணி நாடே இவர்களால் புகழ் பெற்றது.

"பேரிலகும் இருபத்தா றூரொடு மேன்மைமொழி
பெற்றநதி களும்வரைகளும்
பேசரிய சிற்பமமர் கோயிலும் கட்டிபுகழ்
பெருகுபூ வாணி நாடே"

என்பது பூவாணி நாட்டு ஊர்த்தொகைப் பாடலாகும். கட்டி மரபினர் சங்க இலக்கியங்களிலேயே புகழப்படுகின்றனர். **''கங்கன் கட்டி'' ''பல்வேற் கட்டி''** என்று சங்க நூல்கள் கூறுவது இம்மரபினரையே!

தாரமங்கலத்தை அடுத்துள்ள *அமரகுந்தியைத்* தலைநக ராகக் கொண்டவர்கள் இவர்கள். அவ்வூர் அமராவதிப் பட்டணம் என்றும் அழைக்கப்பட்டது. *'அமரகுன்று'* எனப் பட்டதே அமரகுந்தி எனப்பட்டது (இவ்வாறே அகத்தூர்க் கல்வெட்டில் ஆனைமலை – ஆனைகுந்தி என்று கூறப்படுகிறது) ஒய்சளர், விசயநகர அரசு, மதுரை நாயக்கர், மைசூர் உடை யார்கள் முதலிய அரச மரபினரின்கீழ் சிற்றரசாக விளங்கினர் **'வேளாளர் நலங்காத்தான்' 'மன்னர் வணங்கினும் தான் வணங்காதான்' 'வணங்காமுடிமுதலி'** என்ற சிறப்புப் பெயர்கள் அவர்களுக்குண்டு (எலவம்பட்டி பூசாரிக் கவுண்டர் விட்டு ஓலைச்சுவடி)

ஒரு மொழி வைத்துலகாண்ட சேரலாதன் போல **'ஒரு வார்த்தையில்'** அதிகாரம் செலுத்தியவர்கள் அவர்கள். இதனைத் தாரமங்கலம் ஏழம்பேசுரர் கோயில் சாசனப் பாடல் சுவைபட விளக்குகிறது.

> 'செங்கதிர் பன்னிரண்டு ஈசர் பதினொன்று
> திக்கும்பத்து
> கங்கையும் ஒன்பது வெற்பெட்டு எழுகடல்
> கார்த்திகையாறு
> ஐங்கணை நான்மறை முச்சுடர் சாதி
> யவையிரண்டே
> மங்கை வரோதயன் கட்டி முதலியார்
> வார்த்தை ஒன்றே!'

பவானியுட்படப் பதினாறு இடங்களில் கோட்டை கட்டி அரசு புரிந்தனர். பவானிக் கோயிலில் கட்டி முதலியாரின் திருப் பணியை விளக்கும் கல்வெட்டுக்கள் மூன்று கிடைத்திருக் கின்றன. கட்டி என்பதே பழம் பெயர். பிற்காலத்தில் கெட்டி என்று மாறிவிட்டது.

வேதநாயகி கோயில் முன்மண்டப விதானத்தில் உள்ள கல்வெட்டு கி. பி. 1645 ஆம் ஆண்டில் வெட்டப்பட்டது. அம்மண்டபத்தைக் கட்டியவர் இம்முடிக் கெட்டி முதலியாரின் மனைவி சின்னம்மையார் என்று கூறுகிறது. சின்னம்மையார் சிறந்த தமிழ்ப் புலவருமாவார். எம்பிரான் கவிராயருடைய மனைவி பூங்கோதையுடன் சேர்ந்து '**கண்ணொளி கதிரொளி**' என்ற அத்வைத நூலைப் பாடியவர்.

சங்கமேசுவரன் கோயிலுக்குச் சுத்துத் திருமாளிகை, முன் நிருத்த மண்டபம், சிகரம், பண்ணார்மொழியம்மனுக்குக் கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம், அரங்க மண்டபம், குமாரர் கோயில், யாகசாலை, வசந்த மண்டபம், கோபுரம், மதில் உண்டாக்கி ஆயிரலிங்கம் பிரதிட்டை செய்தவர் இம்முடிக் கெட்டி முதலியார். ஆண்டு கி. பி. 1640. கெட்டி முதலியாரின் இந்தத் திருப்பணிகட்கெல்லாம் உதவி செய்தவர்கள் நல்லுடையப்பர், எல்லமன், காவாண்டைக் கவுண்டர், கறுத்தாக் கவுண்டர், மத்தாளிக் கவுண்டர் இவர்களாவார்கள் (கன்னிமார் பாழிக் கல்வெட்டு – எலவம்பட்டி)

பெருமாள் கோயில்

திருஞானசம்பந்தர் பதிகத்தில்,

'பொய்யா மறையானும் பூமி யளந்தானும் போற்றமன்னிச்
செய்யார் எரியாம் உருவம் உறவணங்கும் திருநணாவே'

என்று பாடியமைக்கு ஏற்பச் சங்கமேசுவரன் கோயிலும் பெருமாள் கோயிலும் ஒன்ருக இணைந்தேயுள்ளது. பெருமாளின் திருநாமம் ஆதி கேசவப் பெருமாள். தாயார் சௌந்தர வல்லித் தாயார். அரங்க மண்டபத்தின் வடபால் உருக்குமணி சத்யபாமையுடன் வேணுகோபாலர் அழகிய திருக்கோலத்துடன் எழுந்தருளியுள்ளார். இது மைசூர் அரசர் ஒருவருடைய திருப்பணியாம். மண்டபத் தூண்களிலெல்லாம் இராமாயணச் சிற்பம் கண்டு மகிழத் தக்கன.

இக்கோயில் முன்மண்டப மேல் விதானத்தில் ஒரு கல்

வெட்டுள்ளது. குடந்தைய குல வெள்ளாளரில் வடகரை நாட்டிலே மாத்துண் கோட்டை நல்லாறு கூத்தன்பூண்டியாரும், தெற்கு மணல் நாட்டில் கொடந்தையூர்க் காணியாட்சி அனுமந்தக் கவுண்டன் மகன் திருமலைக் கவுண்டர் தம்பி நாராயணக் கவுண்டரும் கி பி. 1653 ஆம் ஆண்டு அழகிய பெருமாள் நாச்சியார் சௌந்தரவல்லி அம்மனுக்குக் கர்ப்பக் கிரகம், சிகரம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் கட்டி வைத்தனர். இக்காரியத்தை மேற்பார்வை செய்தவன் (திருப்பணி மணியம்) ஆட்சரகாயன். திருப்பணி வேலை செய்தவன் குருவப்பாசாரி மகன் அரங்கப்ப ஆசாரி. இத்திருப்பணி செய்த நாராயணக் கவுண்டர், கெட்டி முதலியாருடைய அமைச்சர் ஆவார்.

கேரோவின் தந்தக் கட்டில்

கிழக்கிந்தியக் கம்பெனியார் பவானியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நாளில் வில்லியம் கேரோ என்பவர் இங்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். அவர் ஆங்கிலேயராதலின் சங்கமேசுவரன் கோயிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. வேதநாயகியின் அழகிய தோற்றத்தில் மனம் பறிகொடுத்த அவர் பூசை வேளையில் கிழக்கு மதில் சுவரில் துளைகள் செய்து அதன் மூலம் அம்மனை வணங்கி மனமகிழ்ந்து வந்தார். நாளடைவில் வேதநாயகியின் அடியவரானார்.

ஒரு நாளிரவு தன் மாளிகையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார் கேரோ. நள்ளிரவில் அழகிய பெண்ணொருத்தி வந்து எழுப்பிக் கீழே அழைப்பதாக உணர்ந்தார். கீழே வந்ததும் மாளிகையின் மாடி இடிந்து விழுந்தது. இவ்வற்புதம் வேதநாயகியின் அருளால் விளைந்தது என்று எண்ணிய கேரோ மிகமகிழ்ந்து ஒரு தந்தக்கட்டிலை அம்மனுக்குத் தன் நினைவாகக் கொடுத்தார். 1804 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் நாள் என்று நாளுமிட்டுத் தன் கையொப்பத்தையும் இட்டுள்ளார். அவர் கையெழுத்துடன் கூடிய தந்தக் கட்டிலைக் கோயிலில் இன்றும் கண்டு மகிழலாம்.

இன்றைய திருப்பணி

1955–56ல் தமிழக அரசு உதவிய 10,000 ரூபாயைக் கொண்டு 15,000 வசூல் செய்து ரூ. 25,000 செலவில் திருப்பணி செய்யக் குழு அமைக்கப்பட்டது. பின் நிருத்த மண்டபம் மட்டும் ரூ 32,000 செலவில் அமைக்கத் திட்டம் மாற்றப்பட்டது. அதற்குப் பழங்கற்களையே கொத்திப் போடத் தீர்மானித்தனர். நீண்டகாலமாகிவிட்ட பழங்கற்கள் பொரிந்துள்ளதால் கெட்டித் தன்மை குறைவென்று கருதி 5 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் விரிவாக்கப்பட்டது பின் பல அன்பர்கள் வேண்டு கோளுக்கிணங்க அடிநிலையிலிருந்து கோயில் முழுவதும் புதுத் திருப்பணி புதுக்கற்களால் செய்ய ரூ. 10 லட்சம் செலவில் திட்டம் பெருகியது. இப்பொழுது செலவாகியுள்ள தொகையோ சுமார் 15½ லட்ச ரூபாய். இதுதான் இம்மாபெரும் திருப்பணி யின் வியக்கத்தக்க தொடர் கதை!

மறைந்து கிடக்கும் கொங்குநாட்டு வரலாற்றின் பெருமையை வெளிக் கொணர வேண்டுமென்ற ஆர்வமும்கொண்டு, வள்ளலார் பெருமையையும், வண்டமிழின் நிலையையும் உயர்த்த அயராதுழைக்கும் திருமிகு. நா. மகாலிங்கம் அவர்களின் தொழில் குழுவைச் சேர்ந்த சக்தி சர்க்கரை ஆலை, (ரூ 50,000) பிற நிறுவனங்கள் (ரூ. 50,000) அளித்த ரூபாய் 1 லட்சத்தைக் கொண்டு இராய கோபுரத் திருப்பணி அழகுற நிறைவேறியுள்ளது.

இப்பணியைக் காணும் ஒவ்வொருவரும் திருப்பணிக் குழுத் தலைவர் உயர்திரு. கே. கே. சுப்பண்ண கவுண்டர் அவர்களையும் அவர்தம் செயலாற்றல் வாய்ந்த குழுவினரையும், (கல்வேலை) ஸ்தபதியார் திரு. பி. இராசரத்தினம், (சுதைவேலை) எம். நடேச முதலியார் அவர்களையும், பிற சிற்பிகளையும் திருப்பணி நன்கொடையாளர்களையும் வாயார வாழ்த்திச் செல்வர். நாமும் சேர்த்து வாழ்த்துவோம்! அவர்கள் வாழ்க!

ஊராட்சிக் கோட்டை உயர்மலை

பவானிக்கு அருகில் வடக்கேயுள்ள ஊராட்சிக் கோட்டை மலையின் பெயர் 'நஞ்சு' என்றும், அது சங்க காலத்து 'நன்று' என்றும் முன்பு கண்டோம். பவானிக்கூடற் புராணம் இம் மலையை வேதகிரி என்று கூறுகிறது. கொங்கு மண்டல சதகம் இம்மலையின் தோற்றத்திற்கு ஒரு காரணம் கூறுகின்றது. அலைகளையுடைய காவிரியாற்றின் கரையில் நாரதர் ஒரு வேள்வி செய்ததாகவும் அந்த வேள்விச் சாம்பல்தான் பிற் காலத்தில் வேதகிரி என்றாயிற்று என்பதும் அவர் கருத்து. அப்பாடலைப் பாருங்கள் :

'அலையாடும் பூம்புனல் மேவிய காவிரி
ஆற்றருகே
நிலையான வேத கிரிஎன்ப தேன்நிதி
நித்தநித்தம்
தலையான மாதவ நாரதர் வேள்வியிற்
சாம்பல்கொட்டி
மலையாய் வளர்ந்தது நண்ணுவூர் சூழ்கொங்கு
மண்டலமே!'

இம்மலைமேல் சிவாலயமும், திருமால் ஆலயமும் இருக்கின்றன. சிவபெருமானுக்கு வேதகிரீசுவரன் என்பது பெயர். முன்பு மலைமீது கோட்டை இருந்ததாம். அதனாலேயே ஊராட்சிமலை—ஊராட்சிக் கோட்டை மலை என்றாயிற்று. மலையைச் சுற்றித் தேரோட்டமும் முன்பு நடைபெற்றதாம். இப்பகுதியிலுள்ள மலைகளைத் தொகுத்துக் கூறும் பாட்டில் ஊராட்சிக் கோட்டை மலை சிறப்பிடம் பெறுகிறது.

"வானுலவும் சென்னி மலைகனக மாமலையும்
தேனுயவும் நாககிரி திண்டல்மலை யும்சிறந்த
வெள்ளிமலை மங்கலகிரி மேலணி அரங்கமலை
புள்ளுலவும் செண்பகமாம் பொற்புறுமூ ராட்சிமலை"

என்பதே அப்பாடலாகும்.

இம்மலையின் கிழக்கே மேட்டூர் செல்லும் பெருவயிழின் ஓரத்தில் பழமையான நடுகல் ஒன்று இருக்கின்றது. கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் ஊராட்சிக் கோட்டையை ஆண்டு கொண்டிருந்த கெம்பைய நாய்க்கன் ஊர்மக்களைத் தாக்க வந்த புலியைக் கொன்றான். புலியுடன் ஏற்பட்ட போரில் அவனும் கொல்லப்பட்டான். எனவே, அவன் மகன் அப்பைய நாய்க்கனுக்கு ஊரவர் '**வீரமானியக் காடு**' கொடுத்த செய்தி அதில் கூறப்படுகிறது. புலியுடன் போரிடும் நிலையில் கல்வெட்டுடன் கூடிய அந்த நடுகல் கண்டு மகிழத்தக்கதாகும்.

ஊராட்சிக் கோட்டையின் அருகேயுள்ள வரதநல்லூர் கல்வெட்டுக்களில் '**கற்பாறையான வரதநல்லூர்**' என்று குறிக்கப்படுகிறது. அவ்வூரிலுள்ள நிலமனைத்தும் சங்கமேசுவரன் வழிபாட்டிற்கும், ஆதிகேசவப் பெருமாளுக்கும், அர்ச்சகர்களுக்கும் இறையிலியாக அளிக்கப்பட்டிருந்தது.

ஊராட்சிக் கோட்டை மலைமீது ஏறுவது சற்றுக் கடினமானது. மலைப்பாதை சுமார் 2 மைல் இருக்கும். சில நூல்களில் மலையின் பெயர் '**ஊராய்ச்சிக் கோட்டை**' என்றிருப்பது தவறானதாகும். காலிங்கராயன் அணை கட்டுவதற்காக இம்மலையில்தான் கல் எடுத்தான். அதற்காக அவன் இம்மலையையே விலைக்கு வாங்கினான் என்பர்.

காலிங்கராயன் அணை

பவானியில் காணத்தக்க வரலாற்றுச் சிறப்பான இடம் காலிங்கராயன் கால்வாய், கொங்குப் பாண்டியன். வீர பாண்டியன் காலத்தில் வெள்ளோட்டைச் சேர்ந்த காலிங்கராயன் இவ்வணையைக் கட்டிக் கால்வாயையும் வெட்டி வைத்தார்.

கி. பி. 1253 ஆம் ஆண்டு தொடங்கி 1265 ஆம் ஆண்டு கால்வாய்த் திருப்பணி முடிவுற்றது. கொங்கு நாடெங்கும் விதித்த '**காலிங்கராய வினியோகம்**' என்ற வரியைக்

கொண்டும், கொங்குப்பாண்டிய மன்னன் வீரபாண்டியன் ஆதரவாலும் காலிங்கராயன் இம்மாபெரும் பணியைச் செய்து முடித்தான். காலிங்கராயன் பரம்பரையினர் இன்றும் சமீன் ஊத்துக்குளி பாளையக்காரர்களாக விளங்குகின்றனர். இன்றுள்ள பாளையக்காரர் திருமிகு. அகத்தூர் முத்துராமசாமிக் காலிங்கராயர் அவர்கள்.

56 மைல் நீளமுள்ள இக்கால்வாய் மூலம் சுமார் 14000 ஏக்கர்கள் பாசனவசதி பெறுகிறது. காலிங்கராயனைப்பற்றிக் கொங்கு நாட்டில் பல கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. பல இலக்கியங்களும், தனிப் பாடல்களும் அவனைப் புகழ்கின்றன. அண்மையில் கிடைத்த ஒரு பாடல் சங்கமேசுவரன்–வேதநாயகி துணையால்தான் காலிங்கராயன் இப்பணியைச் செய்ததாகக் கூறுகின்றது.

"மண்டலம் தன்னிலே ஈரோடு கடிகரா
மறுகடிகள் நிகரா குமோ?
வானிலிங் கேசுரர் வேதநா யகியம்மன்
வந்துமுன் சாட்சி செய்ய
வாய்த்தபுகழ் சாத்தந்தை காலிங்க ராயர் அணை
வரத்தினல் கட்டி வைத்தார்
வானிமுதல் ஆதிகரூர் அறுகாத மும்வளர்
வெகுசனம் பிழைக்க வேதான்"

என்பது அப்பாடலாகும்.

வரலாற்றுக் குறிப்புக்கள்

கி. பி. 19 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே மெக்கென்சியின் உதவியாளர்கள் பவானிக் கல்வெட்டுக்களைப் படி எடுத்திருக்கின்றனர். மெக்கென்சியின் குறிப்பில் பவானிக் கோயில் 'கோயமுத்தூரு சில்லா அந்தியூருத் தாலூக்காவுக்குச் சேர்ந்த ஒபளி பவானிக்கூடலு மிட்டா மவுசே நண்ணுவுடையார் கோயில்' என்று குறிப்பிடப்பெறுகின்றது.

வரலாற்று யாத்ரீகன் ஸ்வார்ட்ஸ் பாதிரியார் கி. பி. 1779 ஆகஸ்டிலும், டாக்டர் புக்காணன் 1800 நவம்பரிலும் இங்கு வந்துள்ளனர். பவானியைப் பற்றியும், பவானிக் கோட்டையைப் பற்றியும் பல சுவையான செய்திகளை இவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஐதர் அலி இந்துக் கோயில்களைத் தொடவேயில்லை. திப்புசுல்தான் 1784 ஆம் ஆண்டு பவானிக் கோயில் மானியத்தை நிறுத்திவிட்டான். 2—9—1790 ல் பவானிக் கோட்டை ஆங்கிலேயரால் தகர்க்கப்பட்டது. திப்புவுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் நடைபெற்ற கொங்குநாடு பற்றிய உரிமைப் போராட்டத்தில் பவானி சிறப்பிடம் பெற்றது. 1792 ல் பவானியை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். 1797 ல் கேப்டன் ஓராங் கிழக்கிந்தியக் கம்பெனியின் 22ஆம் பட்டாளத்துடன் இங்கே சிலநாளிருந்தான்.

1799 ல் கொங்கு நாடு இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுத் தென் பிரிவிற்குத் திண்டுக்கல்லும், வட பிரிவிற்குப் பவானியும் தலைநகரங்களாக ஏற்படுத்தப்பட்டன. 5 ஆண்டுகளே பவானி தலைநகராக இருந்தது. பின் சேலம் தனி மாவட்டமாக்கப்பட்டுத் தலைநகர் கோவைக்கு மாறியது. இரண்டாவது கலெக்டர் வில்லியம் கேரோ 22—5—1802 ல் வந்தார். 1832 ல் கலெக்டர் துரூரி காலத்தில் பவானி, காவிரிப் பாலங்கள் பழுது பார்க்கப்பட்டன. 1860 ல் தாலூக்காத் தலைநகர் அந்தியூரிலிருந்து பவானிக்கு மாற்றப்பட்டது.

பழைமை துலக்கும் புதுமைப் படைப்புக்கள்

ஈரோடு வரலாற்றுச் சங்கம்
தமிழக வரலாற்றிற்குப் படைக்கும்
தரமுயர்ந்த தித்திக்கும் தேன்சுவடிகள் !

↓

- காலிங்கராயன் கால்வாய்
- கொங்கு வரலாற்றுக் கட்டுரைகள்
- நாமிருக்கும் நகரம் (ஈரோடு நகர வரலாறு)
- திருத்தொண்டீச்சுரம்
- சாசனப் புதையல்.

கல்வெட்டுக்கள்......
செப்பேடுகள்......
ஓலைச்சுவடிகள்......
பழம் பாடல்கள்......

இவற்றை அடித்தளமாகக்கொண்டெழுப்பிய
அழகிய வரலாற்று மாளிகைகள் !

ஆராய்ச்சி அறுவடைகள் ! அறிவு விளக்குகள் !

: வெளியீடு :

வரலாற்றுச் சங்கம்,
ஈரோடு.

கைத்தறி அச்சகம், கோவை-1.